

அமரர்

# கதிரிப்பிள்ளை தங்கவேல்

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

# நினைவு மலர்

2022

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



குப்பிளான் வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# கதிரிப்பிள்ளை தங்கவேல்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்பான தெய்வத்தின்

பாதக்கமலத்திற்கு

இந்நூல்

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் பெருவிருட்சத்தின்

ஆணிவேராக, குலதெய்வம் போல் இருந்து

எம்மவரின் உயர்வுக்கும், மேம்பாட்டிற்கும்

தன்னைத் தியாகம் செய்து அணையாத

ஜோதியாய் அன்பு, பண்பு, கருணை போன்ற

நற்குணங்களைத் தன்னகத்தே கொண்டு

வாழ்வாங்கு வாழ்ந்து பிரிவென்ற ஆறாத்துயரில்

எம்மைத் தவிக்கவிட்டு இறைவன் தன்

பாதமலர்கமலங்களைச் சென்றடைந்த எமது

அன்புத் தெய்வத்திற்கு கண்ணீர் மல்கி இம்

மலரை காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
13.06.1942

மறைவு
02.05.2021

# அமரர் கதிர்ப்பிள்ளை தங்கவேல்

## திதி நிர்ணயம்

ஆண்டு பிலவ வாம் வைகாசி மாத
பூண்ட அபரபக்க ஷஷ்டி திதிதனில் – நீண்ட
பண்புமிகு தங்கவேல் எனும் உத்தமன்
விண்ணுலகம் சேர்ந்தநாள் எனக்கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப் பாடல்கள்
# பஞ்ச புராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

தந்ததுன் தன்னை கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர் கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந்துறை யுறை சிவனே
எந்தையே ஈசாஉடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர் கைம்மாறே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனை
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்கள் குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

கற்பனைக் கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோகமாகும் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா ஞானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்றுகண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துதிய மெய் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டா ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொணடர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்
கண் நுதலான் தன் கருணைக்கண் காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே.
ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய், அருள் தருள்வாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே.
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,
விலங்கு மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கு அரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்



## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம்; துன்பம்போம்; நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரரிடர் தீர சமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து
வர வர வேலா யுதனார் வருக!
வருக வருக மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் முருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விபச சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசுர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியில் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்பரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிகுகுண டிகுடிகு டிககுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோ தனென்று
உன் திருவடியை உறுதியென் றெண்ணும்
எந்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க
முன்கையி ரண்டும் முரண்வேல் காக்க
பின்கையி ரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுது தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேசம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் காக்க
பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிசு காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தானெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருசுரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தனிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமுந்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதும் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடன் ஒருநினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கிலும் வசமாய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைமன்ன ரண்மர் சேர்தங்கு அருளுவர்
மாற்றவ ரல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளும் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

கந்தசஷ்டி கவசம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளாறு பதிகம்
## சம்பந்தர் அருளியது

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய் நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொண்றைதிங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அறநெறி நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள் தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உரும்இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி அதள தாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிள முலைநன் மங்கைஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8


பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும்நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொள்ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
நானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலைஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SATHYA SAI ASHTOTTARASHATA NAMA RATNAMALA

1. Aum Sri Bhagawan Sathya Sai Babaya Namah
2. Aum Sri Sathya Swarupaya Namah
3. Aum Sri Sai Sathya Dharma Parayanaya Namah
4. Aum Sri Sai Varadaya Namah
5. Aum Sri Sai Satpurushaya Namah
6. Aum Sri Sai Gunatmane Namah
7. Aum Sri Sai Sadhu Vardhanaya Namah
8. Aum Sri Sai Sadhu Jana Poshane
9. Aum Sri Sai Sarva Jnaya Namah
10. Aum Sri Sai Sarva Jana Priyaya Namah
11. Aum Sri Sai Sarva Shakti Murtaye Namah
12. Aum Sri Sai Sarveshay Namah
13. Aum Sri Sai Sarva Sanga Parithyagine Namah
14. Aum Sri Sai Sarva Antharyaminey Namah
15. Aum Sri Sai Mahimatmane Namah
16. Aum Sri Sai Maheshwara Swarupaya Namah
17. Aum Sri Sai Parthi Gramodbhavaya Namah
18. Aum Sri Sai Parthi Kshetra Vivasine Namah
19. Aum sri Sai Yashakaya Shirdi Vasine Namah
20. Aum Sri Sai Jodi Aadi Palli Somappaya Namah
21. Aum Sri Sai Bhardwaja Rishi Gothraya Namah
22. Aum Sri Sai Bhakta Vatsalaya Namah
23. Aum Sri Sai Apantaratmay Namah
24. Aum Sri Sai Avatar Murtaye Namah
25. Aum Sri Sai Sarva Bhaya Nivarine Namah
26. Aum Sri Sai Apastambha Sutray Namah
27. Aum Sri Sai Abhaya Pradaya Namah
28. Aum Sri Sai Ratnakara Vanshod Bhavaya Namah
29. Aum Sri Sai Shirdi Abheda Shaktyavataraya Namah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. Aum Sri Sai Shankaraya Namah
31. Aum Sri Sai Shirdi Sai Muryaye Namah
32. Aum Sri Sai Dwarakamayi Vasine Namah
33. Aum Sri Sai Chitravathi Tat Puttaparthi Viharine Namah
34. Aum Sri Sai Sakti Pradya Namah
35. Aum Sri Sai Sharanagat Tranaya Namah
36. Aum Sri Sai Anandaya Namah
37. Aum Sri Sai Ananda Daya Namah
38. Aum Sri Sai Aartha Tran Parayanaya Namah
39. Aum Sri Sai Anatha Nathaya Namah
40. Aum Sri Sai Asahaya Sahayaya Namah
41. Aum Sri Sai Loka Bhandhavaya Namah
42. Aum Sri Sai Loka Seva Parayanaya Namah
43. Aum Sri Sai Loka Nathaya Namah
44. Aum Sri Sai Deenjana Poshanaya Namah
45. Aum Sri Sai Murti Traya Swarupaya Namah
46. Aum Sri Sai Mukti Pradaya Namah
47. Aum Sri Sai Kalusha Viduaya Namah
48. Aum Sri Sai Karuna Karay Namah
49. Aum Sri Sai Sarva Adharaya Namah
50. Aum Sri Sai Sarva Hrudaya Vasine Namah
51. Aum Sri Sai Punya Phala Pradaya Namah
52. Aum Sri Sai Sarva Papa Kshaya Karaya Namah
53. Aum Sri Sai Sarva Roga Nivarine Namah
54. Aum Sri Sai Sarva Badha Haraya Namah
55. Aum Sri Sai Anant Nuta Kartanaya Namah
56. Aum Sri Sai Adi Purushaya Namah
57. Aum Sri Sai Adi Sakthye Namah
58. Aum Sri Sai Aparupa Shaktine Namah
59. Aum Sri Sai Avyaktha Roopine Namah
60. Aum Sri Sai Kam Krodha Dhwamsine Namah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. Aum Sri Sai Kanak Ambar Dharine Namah
62. Aum Sri Sai Adbhuta Charyaya Namah
63. Aum Sri Sai Apad Bhandhavaya Namah
64. Aum Sri Sai Prematmane Namah
65. Aum Sri Sai Prema Moortaya Namah
66. Aum Sri Sai Prema Pradaya Namah
67. Aum Sri Sai Priyaya Namah
68. Aum Sri Sai Bhakta Priyaya Namah
69. Aum Sri Sai Bhakta Mandaraya Namah
70. Aum Sri Sai Bhakta Jana Hridaya Viharaya Namah
71. Aum Sri Sai Bhakta Jana HrudayaLayaya Namah
72. Aum Sri Sai Bhakta Paradhinaya Namah
73. Aum Sri Sai Bhakti Jnana Pradipaya Namah
74. Aum Sri Sai Bhakti Pradaya Namah
75. Aum Sri Sai Sujanana Marg Darshakaya Namah
76. Aum Sri Sai Jnana Swarupaya Namah
77. Aum Sri Sai Gita Bodhakaya Namah
78. Aum Sri Sai Jnana Siddhi Daya Namah
79. Aum Sri Sai Sundar Rupay Namah
80. Aum Sri Sai Punya Purushaya Namah
81. Aum Sri Sai Phala Pradaya Namah
82. Aum Sri Sai Purushottamaya Namah
83. Aum Sri Sai Purana Purushaya Namah
84. Aum Sri Sai Atitaya Namah
85. Aum Sri Sai Kaalatitaya Namah
86. Aum Sri Sai Siddhi Rupaya Namah
87. Aum Sri Sai Siddha Sankalpaya Namah
88. Aum Sri Sai Aarogya Pradaya Namah
89. Aum Sri Sai Anna Vastra Daya Namah
90. Aum Sri Sai Samsara Dukha Kshaya Karaya Namah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. Aum Sri Sai Sarva Bhista Pradaya Namah
92. Aum Sri Sai Kalyana Gunaya Namah
93. Aum Sri Sai Karma Dhwansine Namah
94. Aum Sri Sai Sadhu Manas Shobitaya Namah
95.Aum Sri Sai Sarva Mata Sammantaya Namah
96.Aum Sri Sai Sadhi Manas Parishodhakaya Namah
97.Aum Sri Sai Sadhak Anugraha Vat Vriksha Prathisthapakaya Namah
98.Aum Sri Sai Sakala Samsaya Haraya Namah
99.Aum Sri Sai Sakala Tatwa Bodhakaya Namah
100.Aum Sri Sai Yogi Swaraya Namah
101.Aum Sri Sai Yogindra Vanditaya Namah
102.Aum Sri Sai Sarva Mangal Karaya Namah
103.Aum Sri Sai Sarva Siddhi Pradaya Namah
104.Aum Sri Sai Aapanivarine Namah
105.Aum Sri Sai Aarathi Haraya Namah
106.Aum Sri Sai Shanta Murtaye Namah
107.Aum Sri Sai Sulabha Prasannaya Namah
108.Aum Sri Sai Bhagwan Sri Sathya Sai Babaya Namah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஷீர்டி ஸாயி பாபாவின்
# அஷ்டோத்ர சத நாமாவளி

01. ஓம் ஸ்ரீ ஸாயிநாதாய நம:
02. ஓம் ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணாய நம:
03. ஓம் ஸ்ரீ கிருஷ்ண ராம சிவ மாருத்யாதி ரூபாய நம:
04. ஓம் சேஷ சாயினே நம:
05. ஓம் கோதாவரீ தட ஷீரடி வாஸினே நம:
06. ஓம் பக்த ஹ்ருதாலயாய நம:
07. ஓம் ஸர்வ ஹ்ருத்வாஸினே நம:
08. ஓம் பூதாவாஸாய நம:
09. ஓம் பூதபவிஷ்யத் பாவ வர்ஜிதாய நம:
10. ஓம் காலா தீதாய நம:
11. ஓம் காலாய நம:
12. ஓம் கால்காலாய நம:
13. ஓம் காலதர்பதமனாய நம:
14. ஓம் ம்ருத்யுஞ்ஜயாய நம:
15. ஓம் அமர்த்யாய நம:
16. ஓம் மர்த்யாபயப்ர தாய நம:
17. ஓம் ஜீவாதாராய நம:
18. ஓம் ஸர்வாதாராய நம:
19. ஓம் பக்தாவன ஸமர்த்தாய நம:
20. ஓம் பக்தாவன ப்ரதிக்ஞாய நம:
21. ஓம் அன்னவஸ்த்ரதாய நம:
22. ஓம் ஆரோக்யக்ஷேமதாய நம:
23. ஓம் தனமாங்கல்யப்ரதாய நம:
24. ஓம் ருத்திஸித்திதாய நம:
25. ஓம் புத்ர மித்ர களத்ர பந்துதாய நம:
26. ஓம் யோகக்ஷேமவஹாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. ஓம் ஆபத்பாந்தவாய நம:
28. ஓம் மார்க்பந்தவே நம:
29. ஓம் புக்திமுக்திஸ்வர்காபவர்கதாய நம:
30. ஓம் ப்ரியாய நம:
31. ஓம் ப்ரீ திவர்தனாய நம:
32. ஓம் அந்தர்யாமினே நம:
33. ஓம் ஸச்சிதாத்மனே நம:
34. ஓம் ஆனந்தாய நம:
35. ஓம் ஆனந்ததாய நம:
36. ஓம் பரமேச்வராய நம:
37. ஓம் பரப்ரம்ஹணே நம:
38. ஓம் பரமாத்மனே நம:
39. ஓம் ஞானஸ்வரூபிணே நம:
40. ஓம் ஜகத பித்ரே நம:
41. ஓம் பக்தனாம் மாத்ரு தாத்ரு பிதா மஹாய நம:
42. ஓம் பக்தாபயப்ரதாய நம:
43. ஓம் பக்த பாராதீனாய நம:
44. ஓம் பக்தானுக்ர ஹ காதராய நம:
45. ஓம் சரணாகதவத்ஸலாய நம:
46. ஓம் பக்தி சக்தி ப்ரதாய நம:
47. ஓம் ஞான வைராக்யதாய நம:
48. ஓம் ப்ரேமப்ரதாய நம:
49. ஓம் ஸம்சய ஹ்ருதய தௌர்பல்ய பாபகர்ம-
வாஸனா க்ஷயகராய நம:
50. ஓம் ஹ்ருதய க்ரந்திபேதகாய நம:
51. ஓம் கர்மத்வம்சினே நம:
52. ஓம் சுத்த ஸத்வஸ்திதாய நம:
53. ஓம் குணாதீத குணாத்மனே நம:
54. ஓம் அனந்த கல்யாண குணாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. ஓம் அமித பராக்ரமாய நம:
56. ஓம் ஜயினே நம:
57. ஓம் துர்தர்ஷா க்ஷோப்யாய நம:
58. ஓம் அபராஜிதாய நம:
59. ஓம் த்ருலோகேஷு அஸ்கந்திதகதயே நம:
60. ஓம் அசக்யராஹிதாய நம:
61. ஓம் ஸர்வசக்தி மூர்த்தயே நம:
62. ஓம் ஸுரூபஸுந்தராய நம:
63. ஓம் ஸுலோசனாய நம:
64. ஓம் பஹுரூப விஸ்வ மூர்த்தயே நம:
65. ஓம் அரூபாவ்யக்தாய நம:
66. ஓம் அசிந்த்யாய நம:
67. ஓம் ஸுக்ஷ்மாய நம:
68. ஓம் ஸர்வாந்தர்யாமினே நம:
69. ஓம் மனோவாக தீ தாய நம:
70. ஓம் ப்ரேமமூர்த்தயே நம:
71. ஓம் ஸுலபதுர்லபாய நம:
72. ஓம் அஸஹாய ஸஹாயாய நம:
73. ஓம் அநாதநாத தீனபந்தவே நம:
74. ஓம் ஸர்வ பாரப்ருதே நம:
75. ஓம் அகர்மானேக கர்மஸுகர்மிணே நம:
76. ஓம் புண்யச்ரவண கீர்த்தனாய நம:
77. ஓம் தீர்த்தாய நம:
78. ஓம் வாஸுதேவாய நம:
79. ஓம் ஸதாம் கதயே நம:
80. ஓம் ஸத்பராயணாய நம:
81. ஓம் லோகநாதாய நம:
82. ஓம் பாவனானகாய நம:
83. ஓம் அம்ருதாம்சவே நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. ஓம் பாஸ்கரப்ரபாய நம:
85. ஓம் ப்ருஹ்மசர்யதப சர்யாதிஸுவ்ரதாய நம:
86. ஓம் சத்ய தர்மபராயணாய நம:
87. ஓம் ஸித்தேச்வராய நம:
88. ஓம் ஸித்த ஸங்கல்பாய நம:
89. ஓம் யோகேச்வராய நம:
90. ஓம் பகவதே நம:
91. ஓம் பக்தவத்ஸலாய நம:
92. ஓம் ஸத்புருஷாய நம:
93. ஓம் புருஷோத்தமாய நம:
94. ஓம் ஸத்ய தத்வபோதகாய நம:
95. ஓம் காமாதி ஸர்வ அக்ஞானத்வம்ஸினே நம:
96. ஓம் அபேதா நந்தானுபவப்ரதாய நம:
97. ஓம் ஸமஸர் வமதஸம்மதாய நம:
98. ஓம் தக்ஷிணாமூர்த்தயே நம:
99. ஓம் வேங்கடேசரமணாய நம:
100. ஓம் அத்புதானந்தசர்யாய நம:
101. ஓம் ப்ரபன்னார்த்திஹராய நம:
102. ஓம் ஸம்ஸார ஸர்வதுக்கக்ஷயகராய நம:
103. ஓம் ஸர்வவித்ஸர்வதோ முகாய நம:
104. ஓம் ஸர்வாந்தர்பஹிஸ்திதாய நம:
105. ஓம் ஸர்வமங்கள கராய நம:
106. ஓம் ஸர்வாபீஷ்டப்ரதாய நம:
107. ஓம் ஸமரஸஸன்மார்கஸ்தாபனாய நம:
108. ஓம் ஸ்ரீஸமர்த்தஸத்குரு ஸாயிநாதாய நம:

மங்களம் மங்களம் மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் உயர்திரு.கதிர்ப்பிள்ளை தங்கவேல்

சிவபூமி எனத் திருமூலநாயனாரால் புகழப்பட்ட சிறப்புடைய ஈழமணித்திருநாட்டின் சிரசாக விளங்குவது யாழ்ப்பாணக் குடாநாடு. யாழ்ப்பாண நகரிலிருந்து வடக்கு புறமாக எட்டு மைல் தொலைவில் அமைந்திருக்கும் சைவத்தமிழ் கிராமமே குப்பிளான். காசிவாசிசெந்திநாதையர் முதலிய மகான்கள் அவதரித்த புண்ணியபூமி. இத்தகைய பெருமை பொருந்திய குப்பிளான் மண்ணிலே "கணிதமேதை' என ஆங்கிலேய கல்விமான்களால் கௌரவப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பெருமையுடைய உயர்திரு கதிரிப்பிள்ளை ஆசிரியர்-நல்லம்மா தம்பதியினரின் அருந்தவப்புதல்வராக 13.06.1942ல் பிறந்தவரே உயர்திரு. தங்கவேல் ஆவார். அமரர்-மனோன்மணி, புனிதவதி, ஞானாமிர்தம், சிவயோகம், குணபூசணம் ஆகியோர் உடன் பிறந்த சகோதரராவார்.

இவர் சிறுவயது முதலே குப்பிளான் கற்கரைக் கற்பகவிநாயகர் மீது அளவற்ற பக்தியும், ஈடுபாடும் உடையவராக விளங்கினார். தன்னுடைய ஆரம்பக்கல்வியை குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும், உயர்கல்வியை யூனியன் கல்லூரி, மற்றும் புகழ்பூத்த யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் பயின்றார். கல்வியில் அளவற்ற திறமை கொண்டவராகவும், உதைப்பந்து முதலிய விளையாட்டுக்களில் திறமைசாலியாகவும் விளங்கினார். சிறுவயதுகளிலேயே குப்பிளான் கிராமமுன்னேற்ற சங்கங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகவும், குப்பிளான் கற்கரைகற்பக விநாயகர் ஆலய பரிபாலனசபை செயலாளராகவும் பணிபுரிந்தார்.

தன்னுடைய சிறுவயதுகளிலேயே தந்தையை இழந்த அன்னார் தன்னுடைய குடும்பத்தின் முழுப்பொறுப்பையும் ஏற்று, தன்னுடைய தாய்க்கும், சகோதரிகளுக்கும் உற்றதுணையாக, ஒரு சகோதரனாக, தந்தையாக இறுதிவரை அவர்களை வழிநடாத்தி வந்தார்.தன்னுடைய இளமைக்காலத்தை அதன் துடிப்பான மகிழ்வான அனுபவங்களை தன்னுடைய குடும்பத்தினரிற்காக தியாகம் செய்து, குடும்பத்தின் முன்னேற்றத்திற்காக அல்லும்பகலும்பாடுபட்டார்.சிறுவயது களிலேயே மிகுந்த ஊர்பற்றும், சமூகமட்ட அமைப்புக்கள் மூலம் ஊர்மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தி விட வேண்டும் என்ற அளவற்ற அவாவும் உடையவராக விளங்கினார். தன் வாழ்நாளின் பிற்பகுதிகளில் கடல் கடந்து, கனடா மண்ணில் வாழ்ந்த போதிலும் ஊர் மீதும் கிராமத்து மக்கள் மீதும் அவர் காட்டிய அபிமானம் அவரின் இளமைக்காலத்திலிருந்தே அவரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமாக வேரூன்றியிருந்த தாய்மண்ணின் மீதான பற்றின் வெளிப்பாடேயாகும். தன்னுடைய 23வது வயதிலே இலங்கை அரச சேவையில் தன்னுடைய நியமனத்தை பெற்றுக் கொண்டார். ஆரம்பத்தில் கொழும்பு வீடமைப்பு திணைக்கள எழுது வினைஞராக சேவையில் இணைந்து, பின்பு யாழ் மாவட்ட செயலகத்திலும் அதைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் உள்ளக கணக்காய்வளாராகத் தனது சேவையை நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும் செவ்வனே ஆற்றி வந்தார்.

தன்னுடைய 31வது வயதிலே குப்பிளான் புகழ்பூத்த உயர்திரு செல்லையா காந்திமதி தம்பதியினரின் புத்திரியான, தனலட்சுமியை கரம் பற்றினார். அன்பும் பண்பும் நிறைந்த அவர்களின் இல்லற வாழ்வின் பயனாக ரமணா, கணாதீபன், குகதர்சன் ஆகியோரைப் பெற்றெடுத்து நன்மக்களாக வழிநடாத்தி பெருமைகொண்டார். அதேவேளை தன்னுடைய சகோதரிகளின் திருமணங்களையும் சிறப்பாக நடாத்தி, அவர்களின் வாழ்விற்கும் உறுதுணையாக இருந்து தன்னுடைய கடமைகளை குறைவின்றி ஆற்றினார்.

இலங்கையில் நிலவிய கோரயுத்தத்தின் விளைவாக கனடா நாட்டிற்கு குடிபெயர்ந்து அங்கும் அல்லும்பகலும் போராடி தன்னுடைய குடும்பத்தை உயர்நிலைக்கு உயர்த்திட உழைத்தார். தன்னுடைய பிள்ளைகள் மூவரையும் சிறப்பாக கற்பித்து பொறியியற் பட்டதாரிகளாக்கி, அவர்கள் மிக உயர் பதவிகளில் பணிபுரிவதைக்கண்டு "தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க தக்கவராகி அளவற்ற பெருமை கொண்டார். அத்துடன் செந்தில்காருணியன், கார்த்திகா, நிரஞ்சினி ஆகியோரை அன்பு நிறைந்த மருமக்களாகப் பெற்று, பேரப்பிள்ளைகளின் வளர்ச்சியையும் கண்டு மனம் பூரித்தார்.

கடல் கடந்து வெகுதூரம் சென்றபோதும், தன் தாய் மண்ணான குப்பிளான்மீது கொண்ட அளவற்ற காதல் இறுதிவரை அவரை விட்டு நீங்கிவிடவில்லை. அங்கு சென்றபோதும் ஆலய அபிவிருத்திகள், பாடசாலை அபிவிருத்தி செயற்றிட்டங்கள், கிராம மக்களின் வாழ்க்கைத் தரஉயர்வு என்பவற்றிற்காக தாராளமான பங்களிப்பை வழங்கிடத் தவறியதில்லை.

புலம்பெயர்ந்த குப்பிளான் மக்களுடன் ஒன்று சேர்ந்து குப்பிளான் விக்கினேஸ்வரா மக்கள் மன்றத்தலைவராக பணியாற்றி பல்வேறு வெற்றிகரமான நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திச்செயற்றிட்டங்களை நிறைவு செய்தார். அத்துடன் பாடசாலை அபிவிருத்தி, வறிய மாணவரிற்கான உதவித்திட்ங்கள், சனசமூக நிலைய நிர்மாணப்பணி என பல்வேறு திட்டங்களிற்கும் நேரடியாகவும், மறைமுகமாகவும் செயலாற்றி மனநிறைவு கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் பிரம்டன் தமிழ் மூத்தோர் சங்கத்தின் உபதலைவராகப் பதவி வகித்து, பல்வேறுபட்ட மகிழ்ச்சியான சந்திப்புக்களை வளர்சித்திட்டங்களை செயற்படுத்தினார். தன்னுடைய சிறந்த தலைமைத்துவ பண்புகள் மூலமாகவும், சிறந்த சினேகபூர்வமான தொடர்பாடல் மூலமாகவும் அளவற்ற நண்பர்களை தனதாக்கி கொண்டார். மற்றோரின் துன்பத்தின் போது, ஆதரவாக, நல்லூக்கம் வழங்கும் மனிதாபிமானியாக அர்த்தமுள்ள வாழ்வை வாழ்ந்தார்.

தன்னுடைய குடும்பம் மற்றும் சகோதரிகளின் குடும்பத்தின் வளர்ச்சியில் அக்கறையும், பெருமையும் கொண்டதோடு மட்டுமல்லாமல் பரந்த அளவில் தன்னைச் சூழவுள்ள மனிதர்களை நேசித்ததுடன் அவர்களின் வளர்ச்சியிலும் மனமகிழ்வடைந்தார்.

தன்னுடைய இறுதிக்காலம் வரை தன் குப்பிளான் மண்ணின் அபிவிருத்திக்காக, பாடசாலை அபிவிருத்திக்காக பல்வேறு திட்டங்களை தீட்டியதோடு, நின்று விடாமல் பல்வேறு திட்டங்களை தான் வாழும் காலத்திலேயே நிறைவேற்றி அழகு பார்த்தார்.

தன்னுடைய பணி ஓய்வின்பின், முழுமையான திருப்தியான ஓய்வு காலத்தை களித்திருந்தார். ஒரு முழுமையான நிறைவான இலட்சிய வாழ்வை வாழ்ந்து திருப்தி கொண்டவராக, தன்னுடைய குடும்பத்தை மட்டுமல்லாது, உறவுகளை நண்பர்களை, ஊர்மக்களை ஆறாத்துயரில் மூழ்கடித்து 02.05.2021 அன்று எம்மையெல்லாம் விட்டு கற்கரைக்கற்பக விநாயகரின் பாதாரவிந்தங்களை அடைந்து விட்டார். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" எனும் வள்ளுவனார் வாக்கிற்கிணங்க அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனுடன் இரண்டறக் கலந்து சாந்தியுற நாமும் இறைஞ்சுவோமாக

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரின் பெற்றோர்



கணித மேதை
திரு. காசிப்பிள்ளை கதிரிப்பிள்ளை
(1912-1957)

ஆங்கிலேயரால் "கணிதமேதை" என்று கௌரவிக்கப்பட்ட பெருமைக்குரியவர் ஆவார்.முன்னாள் ஆசிரியரும் ஆவார்.



திருமதி. கதிரிப்பிள்ளை நல்லம்மா
(1917-1996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா எங்கள் அன்பு அண்ணா

ஐவருக்குள் ஒருவனாய் பிறந்து எங்களுடன் பாசமாய் இருந்தீர்கள், எல்லோருடைய முன்னேற்றத்தையும் கண்டு தக்க நேரத்தில் உதவிகள் புரிந்து சந்தோஷம் அடைந்தீர்கள். எனக்கு இங்கே ஒரு சகோதரன் என்றும் இருக்கிறீர்கள் என்று மனதில் கோட்டை கட்டி இருந்தேன். ஐந்து சகோதரத்துடன் பிறந்து இப்போ இங்கே ஒரு கை இழந்தது போல இருக்கின்றேன். அண்ணா காலை 6.00 மணிக்கு ஒவ்வொருநாளும் தொலைபேசியில் காலைவணக்கம் போடுவீர்கள். அந்த சத்தத்துடன் நானும் எழும்பி காலை வணக்கம் என்று போடுவேன். அதை இழந்து கவலையான காலையாய் இருக்கிறது. இவ்வளவு விரைவாக எங்களை விட்டு பிரிவீர்கள் என்று கனவிலும் நினைக்கவில்லை. அண்ணா உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கற்பக விநாயகரை வேண்டுகின்றோம். எம் பிள்ளைகளும் மாமாவின் பெருமை சொல்வார்கள். வருங்கால சந்ததிகளும் உங்கள் புகழை சொல்வார்கள்.

அன்புச் சகோதரி
செ.புனிதவதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் நினைவுகள்...................

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையுள் தெய்வத்துள் வைக்கப்படும் எனும் வள்ளுவரின் வாக்குக்கு இணங்க வாழ்ந்து மறைந்த எமது தாய்மாமனும் எமது தாயாரின் மூத்த சகோதரருமாகிய அமரர் கதிரிப்பிள்ளை தங்கவேல் அவர்களது கடந்த காலங்களை நினைத்துப் பார்க்கும் போது அவரது சிறுபராயத்திலே தந்தையை இழந்த எமது தாயாருக்கும் அவரது ஏனைய சகோதரிகளுக்கும் சிறந்த சகோதரனாகவும் தந்தையாகவும் இருந்து அவர்களது கல்வி முன்னேற்றத்துக்கும் வாழ்வுக்கும் உறுதுணையாக இருந்தார். ஒரு தந்தைக்கு உரிய கண்டிப்புடன் அவர்களை வழிநடத்தியும் இருந்தார். அக்காலப் பகுதியிலே கிராமத்தில் உள்ள சமூக நிறுவனங்கள் ஊடாக தாம் வாழ்ந்த சமூகத்துக்கும் பல சேவைகளை ஆற்றி உள்ளார். குடும்ப தலைவர் ஆகிய காலம் முதல் அவர் தனது மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்களையும் அரவணைத்து சென்றுள்ளார். புலம்பெயர்ந்து நீண்டதூரம் சென்றாலும் எம்முடனும் ஏனையோருடனும் வாராந்தம் தமது சுகநலன்களை பரிமாற தவறவில்லை. அதேபோன்று எமது கிராம ஆலய வளர்ச்சி செயற்பாடுகளுக்கும் பாடசாலை மற்றும் சனசமூக நிலைய செயற்பாடுகளுக்கும் சிறந்த பங்களிப்பினை வழங்கிவரும் ஒருவராகவும் காணப்பட்டார். காலத்துக்கு காலம் குடும்ப சகிதமாக தமது கிராமத்துக்கு வந்து தனது சகோதரிகள் மற்றும் பிள்ளைகளுடன் தனது நாட்களை செலவிட்ட தருணங்களை மறக்கமுடியாது.அன்னாரின் பிரிவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூற வார்த்தைகள் இல்லை, ஆனாலும் இறைவன் திருவடியில் நித்திய இளைப்பாற இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**ஞா.கணேசலிங்கம் குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையாகிய தமையனுக்கு கண்ணீர் காணிக்கைகள்

இனிப்புலரும் பொழுதுகளில் நீங்கள் எம்மோடு இல்லை என்ற உண்மையை இன்னும் ஏற்க முடியவில்லை. அனுதினமும் ஓய்வின்றி எம்மைச்சுற்றி ஒளி வீசி வழிகாட்டிய எம் வானின் சூரியன் அஸ்தமித்துக் கொண்டது.

மரணம் இவ் மானிட வாழ்வில் இயற்கை என்றாலும் உங்கள் மீளாத்துயரில் கண்டு துவண்டு விட்டோம். ஆறு வயதில் தந்தையை இழந்த பின் தமையனான நீங்கள் தந்தையாக இருந்து வழிகாட்டினீர்கள் இன்று இன்னுமோர் தந்தையையும் இழந்து விட்டேன்.

அண்ணா உங்கள் திடீர் மறைவு எங்கள் எல்லோர் நெஞ்சங்களையும் உலுக்கி விட்டது. உங்கள் அன்பும் எமக்காக நீங்கள் வாழ்ந்த வாழ்வினையும் மீட்டிப் பார்க்கின்றேன்.

அண்ணா! நீங்கள் யாழ் இந்துக்கல்லூரி விடுதியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது உங்களுக்குப் படிப்பதற்குக் கொடுத்த பணத்தினை மீதப்படுத்தி உடைகள் வாங்கித் தந்தீர்கள். நாம் எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டதையும் மறக்க முடியாது. குறித்த காலத்தில் அம்மாவுடன் குடும்ப பாரத்தினை ஏற்றுக் கொண்டு எங்களை மேலே தொடர்ந்து படிப்பித்தீர்கள்.

1970ல் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான போது நீங்களே என்னைக்கூட்டிச் சென்று வேண்டிய அனைத்து கருமங்களையும் செய்து தந்தீர்கள். அது மட்டுமல்லாமல் ஆசிரியர் தேர்விற்கான நேர்முகப்பரீட்சை கொழும்பில் நடைபெற்ற பொழுது அதற்கு என்னை விமானம் மூலம் அழைத்துச் சென்று கொழும்பில் பல இடங்களுக்கும் கூட்டிச் சென்று காண்பித்தீர்கள். ஆசிரிய நியமனம் திருகோணமலையில் இடம்பெற்ற போதும் நீங்களே என்னைக் கூட்டிச் சென்றீர்கள். இப்படி நீங்கள் செய்த உதவிகளை என்றும் மறக்க முடியாது.

இப்போதும் கூட கனடாவில் இருந்து கொண்டு வாரத்திற்கு ஒருமுறையென்றாலும் அழைப்பினை ஏற்படுத்தி எல்லோரினதும் சுகங்களையும் விசாரிப்பீர்கள்.

அண்ணா! தொலைபேசி மணி இனிஎம் பிறந்தநாளில் உங்களிடம் இருந்து வர விதிக்கப்படவில்லை. தொலைதூரம் நீங்கள் சென்றிருந்தாலும் எம்மில் பாதியாய் வாழ்ந்தீர்கள். "நமது உயிர் தங்கி இருக்க இறைவன் நமக்களித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடகை வீடு தான் இந்த உடல் இதை என்றேனும் ஒருநாள் காலி செய்தாக வேண்டும்." என்ற பாபாவின் வாக்கிற்கு ஏற்ப இன்று எங்களை விட்டு விண்ணுலகம் சென்று விட்டீர்கள்.

இனி எம் பாசமிகு அண்ணவாக மனதில் என்றும் வாழ்வீர்கள்.

***உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்***
***என்றும் பாசமிகு சகோதரி***
பே. ***சிவயோகம்***

எவன் ஒருவனுக்கு தன்னிடத்தில் நம்பிக்கையில்லையோ அவனே நாத்திகன்!

ஆன்மாவால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே அப்படி நினைப்பது சமயத்திற்கு மிகப் பெரிய முரண்பட்ட கருத்தாகும்.

நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆகிவிடுவாய். - சுவாமி விவேகானந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமிகு அண்ணனின் நினைவலைகள்.....

எங்கள் குடும்பத்தின் வழிகாட்டியாக அமைந்து முன்னுதாரணமான இலட்சிய வாழ்வை முழுமையாக வாழ்ந்து மறைந்த எங்கள் அண்ணா-மாமாவின் பசுமையான நினைவுகளை மீட்டிப் பார்ப்பது ஒரு நனவிடை தோய்தலான அனுபவமாகும்.

தன்னுடைய வாழ்வினை மற்றையதன்னைச் சூழ்ந்தவர்களின் மகிழ்விற்காகவே இளமைக்காலம் முதல் அர்ப்பணித்து வாழ்வை எவ்வாறு அர்த்தமானதாக வாழ்வது, உறவுகளை எவ்வாறு உண்மையாக நேசிப்பது, தலைமைத்துவ பண்புகள் தொடர்பாடல் திறன்களை எவ்வாறு நேர்த்தியாக கையாளுவது, தனிப்பட்ட வாழ்வை எவ்வாறு ஒழுக்கமாக வாழ்வது என ஒரு முன்னுதாரணமான இலட்சிய வாழ்வை வாழ்ந்து வழிகாட்டியவர் நீங்கள்தான். தன்னுடைய குடும்பம் மட்டும் என சிந்திக்காது தன் கிராமம், சமூகம் என எல்லைகளை தாண்டி பொது வாழ்விற்காக தங்களை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்திக்கொண்டீர்கள். உங்களுடைய வாழ்வின் ஒவ்வொரு படி நிலையையும் ஆழமாக நேசித்து முழுமையாக வாழ்ந்தீர்கள்.

தன்னுடைய சகோதரிகள், அவர்களுடைய குடும்பம், பிள்ளைகள் என மிகுந்த அக்கறையுடன் ஆலோசனைகள் கூறி எங்கள் வெற்றிகளை தன் வெற்றியாக எண்ணி மனநிறைவடைந்தீர்கள். நல்ல மனித நேயத்துடனும், அளவற்ற கிராமப்பற்றுடனும் செயற்பட்டதுடன் தான் ஊரிற்கு வரும் போதெல்லாம் கிராம முன்னேற்றத்தின் படிநிலைகளை நீங்கள் ஆராயத் தவறியதில்லை. பாடசாலை,ஆலயங்கள், மாணவரிற்கான உதவி என அளப்பரிய உதவித்திட்டங்களை நெறிப்படுத்தி தாராளமான பங்களிப்பையும் வழங்கியிருந்தீர்கள்.

2017களில் உங்களுடைய சொந்த மண்ணிலுள்ள வீட்டில் 3 மாத காலமளவில் தங்கியிருந்து, மனநிறைவடைந்தீர்கள். நீங்கள் தங்கியிருக்கும் காலப்பகுதியில் கூட பல்வேறு கிராம முக்கியஸ்தர்களை சந்தித்து, மேலும் என்னென்ன அபிவிருத்தி திட்டங்களை செய்ற்படுத்தலாம் என இரவு பகலாக நீங்கள் ஆராய்ந்ததை நாங்களெல்லாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம்.

ஒரு சகோதரனாக, தகப்பனாக கணவனாக, மாமனாக, பேரனாக நிறைவாக தனது கடமைகளில் சிறுகுறைவு கூட ஏற்படாது தன் கடமைகளை 100% ஆற்றி தன் இறுதி நாள் வரை கட்டுக்கோப்பான கொள்கை பிடிப்பான முன்னுதாரணமான வாழ்வை வாழ்ந்து எம்மை விட்டு திடீரென நீங்கியிருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களிற்கு இட்டு நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தி நிற்கின்றது. எவ்வாறெனினும் அவர் வாழ்ந்த தன்னிறைவான முழுமையான வாழ்வு எங்களிற்கெல்லாம் ஒரு முன்னுதாரணத்தை விட்டுச் சென்றிருக்கின்றது. நீர்க்குமிழி போன்ற மனித வாழ்வின் இறுதியில் ஒருவரின்வாழ்வுமுறைமை, நற்காரியங்கள்,பண்பாடுகள், சேவைகள் என்பன தான் அந்த மனிதனின் பெருமையை வரலாறு தோறும் பேசி நிற்கின்றன. அந்த வகையில் அர்த்தமுள்ளதான வாழ்வை வாழ்ந்து இறைவனடி சேர்ந்த எங்கள் அண்ணா-மாமாவின் பசுமையான பிரிவினால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா நித்திய சாந்தியடைய எல்லாம்வல்ல கற்கரையானிடம் இறைஞ்சுகின்றோம்.

**திரு.க.வைத்தியநாதன் குடும்பம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Grandchildren

**My one and only Thatha**

"Do all the good you can, by all the means you can, in all the ways you can, in all the places you can, at all the times you can, to all the people you can, as long as ever you can." John Wesley.

Thatha, my grandfather, is the definition of this quote. My grandfather led with modesty and preached generosity. I am fortunate to have witnessed an individual whose kindness, greatness and legacy will live on for generations to come. Time and time again my grandfather has pushed me to work harder, to be stronger and to be smarter. I have and will continue to remember this during difficult times. He was my biggest motivator. He never restricted me and always reminded me that, the opportunities out there are endless. When it came to choosing my career path, he was one of a few individuals who told me to do what I loved. My grandfather taught me to leave my ego aside and to cherish those around you. He inspired me to take part in communities that meant something to me, to develop my network and to treat everyone equally. He was my favourite person, a best friend and in all honesty, I feel a little lost without him. To my loving thatha, I want to say thank you, for all your blessings and teachings. Without you, I do not believe that I will be the person I am today, so I appreciate everything you have done for me. From my childhood, I think I have tried to embody what you do; I have always looked up to you because you were the living embodiment of honor to me. You have been my moral compass and you will continue to take that role from up above. Your physical presence might be missing but I know you will be watching over me. I miss you so much, I love you so much more and you will never be forgotten.

**Abirna Senthilkaruniyan**
**(Grand-daughter)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A role model, best friend, and now my guardian angel. My grandfather has always been by my side during every milestone, hurdle, and accomplishment in my 16 years of life. He guided me and taught me lifelong lessons which I will keep with me forever. His morals have been shined upon me and shaped me into the person I am today. I will always remember walking up to him and making sure he ate his meals and indulging in funny conversations. My grandfather gave me the opportunity of my first job and with that I want to continue to live on his legacy within the Brampton Tamil Seniors Association. To my dearest Thatha, you inspire me every day, guide me every step of the way, and you are always and forever in my heart.

Love you and miss you,

**Arthihaa Senthilkaruniyan (granddaughter)**

My loving grandfather was an extraordinary man, who I will never forget. He was by my side for all of my life. I have shared so many memories with my grandpa. Some include him buying me chocolates from bulk barn or him driving me to school when I got late. But there was always that one that really stood out. For 3 straight years on my birthday my grandpa would wake me up early at 6:00 in the morning and he would tell me to come to his room because he has a surprise waiting for me. I would always run straight to his room to see him turn on his antique radio and switch it to the Tamil Radio Station where they would announce the names of the birthdays of that day. When I heard my name on the radio, we would smile at each other and I would give him the biggest hug I could ever give. During that moment, I was going through a million emotions but mainly love. I was feeling the love that my grandpa feels for me every moment of his life, but because he is no longer here, I will continue to cherish that love for the both of us. That is just one of the things I love about him, but there are so many other more. He had many



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

good characteristics, but everyone knew him for being so kind and caring. He was always there for anyone and he always was friends with everyone he met, he was an angel. My grandfather was there for all of my life and I know he will continue to be, but just in a different way. I see that my grandpa will always be watching over me, guiding me, and leading me to live a good life just like he did. He was my everything, he was my role model, he was my mentor, but most importantly, he was my best friend. I love you Thatha and I will miss you.

**Ayraah Senthilkaruniyan (Grand-daughter)**

Appappa you were my strength and my inspiration. You would always be there for me no matter what it was. It could be for my studies, music, or sports, anything it was you would be there for me and want the best for me. One of the last things you said to me was that you wanted me to be successful. No matter where it was or what was happening, you would give me the best advice you had and the best advice I could ever ask for. Something that I am proud to say is that you never wanted to stop learning. You always wanted to learn more. One day when I was at your house you asked me to do something on your iPad that I didn't even know how to do but you didn't give up you figured it out. Finally, you are the most respectful person that I have ever met. Anytime I heard you talking to someone, you always spoke respectfully. You treated everyone with respect and never hurt anyone. Appappa, I will miss you so much. I love you.

**Kishan Kanathipan (Grandson)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appappa, you are very special to me. The memories I have of you will never fade away from my heart. When I think of you the first two words that come to my mind are loving and caring. Every year you were always the first person to wish me happy birthday. Appappa, I remember one time I was playing hide and seek and I hid in your room closet. When they came looking for me you told them that I was not there. THANKS for having my back. I wish I could talk to you just one more time, just to say how grateful I am to have you as my grandpa. I wish I could HUG you just one more time to show you how much I LOVE YOU. Appappa you will always have a special place in my heart. I will miss you a lot.

**Love,**
**Caveen Kanathipan**
**(Grandson)**

Apappa wanted all his grandkids to study well. Appappa buys us gift cards for our birthdays. He wouldn't go a day without letting us know how special we truly are. Letting him know how special he is, is exactly how I want him to feel today. His main personality trait which I admire is his gentleness. No matter who he talks to, he talks to them respectfully and he always wants us to do the same. He always wanted to check up on others, especially me and my studies. He cared more about how I was doing than himself. That was who my Apappa was.I knowAppappa is not present with us, but he's in my heart every day. Apappa, I love you and will miss you very much.


**Archanaa Kugatharsan**
**(grand daughter)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appappa was a person with many personalities.one of them was kindness. When I came over, he always gave me a hug. Another thing is that he loves to celebrate birthdays. He also had a smile on him every time I see him. He is also very selfless, he would like me to study hard and to be nice to my sister. I remember when I was 9 he told me about his dad and his grandpa for a school assignment. Appappa is a person who loves his family more than himself. I will miss you and love you always

**From grandson**
**Tarunne Kugan**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

No matter what we want in life we have to give up something in order to get it. Thangavel Mama gave up his childhood home and country to give his family a better life. As everyone in life, Thangavel Mama had his ups and down, but overall lived a life full of triumphs. He was a man with strong attributes that propelled him to live a long and happy life. Although he was a quiet man, he truly was a wise man, who instilled compassion, empathy, and perseverance among his children and grandchildren. Thangavel Mama was jolly and social among those he trusted, and continuously yearned to expand his mind by reading and learning. He was always proud and encouraged everyone to work hard to better themselves, as he did his own life. A testament to his character as a father is truly evident when you see his three children who he has shaped to become strong, independent, contributing members of society, but most importantly the amazing parents they have become themselves. Rest in Peace Thangavel Mama, and to this day, I will never forget all of your personal calls after each of my accomplishments.

**Dr. Saeyoan Thiru**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தான எங்கள் முதல் தலைவர், தங்கவேல் ஐயா!

இருபது வருடங்களுக்கு முன்னர் குப்பிழான் விக்கினேஸ்வரா மக்கள் மன்றம் கனடாவின் ஒன்று கூடலில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட மக்களின் மத்தியில் தங்கவேல் ஐயா தான் எமது மன்றத்தின் தலைவர் என்று ஏகமானதாகத் தெரிவு செய்து அறிவித்த பொழுது எடுக்கப்பட்ட கைதட்டல் ஒலியும் சந்தோசமான ஆர்பரிப்பும் எங்கள் கண் முன்னே தற்பொழுதும் நிற்கின்றது.

தலைமைத்துவ பொறுப்பை ஏற்றுக் கொண்ட நாள் முதல் மன்றத்தினை வளர்த்துக்காட்டுவேன் என்று சத்தமின்றி சபதம் எடுத்தவர் எங்கள் தங்கவேல் ஐயா! தனது சபதத்தினை மன்ற உறுப்பினர்களின் ஒத்தாசையுடன் பல்வேறு முன்மாதிரியான திட்டங்களை செயற்படுத்தி மன்றத்தின் புகழை உலகளாவியரீதியில் வாழும் குப்பிழான் மக்கள் அனைவருக்கும் அறியச் செய்தவர். அத்திவாரம் பலமாக இருந்தால் தான் எவ்வளவு உயரமான கட்டமாக இருந்தாலும் அதனைக் கட்டி முடிக்கலாம் என உறுதியாக நம்பி கனடா வாழ் குப்பிளான் மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி மன்றத்தினை மிகவும் பலப்படுத்தியவர். நான் மட்டும் மன்றத்தின் பலத்திற்கும் அதன் புகழிற்கும் காரணமல்ல மன்ற உறுப்பினர்கள் இல்லையெனில் இது சாத்தியமாகி இருக்காது என சொற்பொழிவு ஆற்றும் ஒவ்வொரு தடவையும் தன்னுடன் கூட இருந்தவர்களை புகழ்ந்து பாராட்டி தானும் மகிழ்ச்சியடைந்த ஒரு உத்தமர் எங்கள் தங்கவேல் ஐயா!

தலைவர் என்பது மக்களினால் அல்லது சமூக நலனில் அக்கறை கொண்டவர்களில் சமூக சேவைக்கான அமைப்பு ஒன்றின் செயற்பாடுகளை தனக்கு உறுதுணையாக உள்ள மற்றைய அனைத்து உறுப்பினர்களுடன் கைகோர்த்து நின்று, அதன் வளர்ச்சிக்காகவும் உழைக்கும் ஒரு தன்னலமற்ற சேவையை வழங்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காக ஒருவருக்கு வழங்கப்படும் அங்கீகாரம். அது மட்டுமன்றி தலைமைக்காலத்தின் பின்னரும் குறித்த அமைப்பின் வளர்ச்சியைக் கண்டு பூரிப்படைவதுடன் தன்னாலான ஒத்துழைப்பையும் வழங்கி அமைப்பிற்கும் மக்களிற்கும் குறைவின்றிப் பயன்பெற வழி செய்யும் ஒரு உன்னதமான பணி அந்த அற்புதமான பணியை எமக்கு சொல்லாமல் செய்து காட்டிய ஒரு பெருந்தகை, எங்கள் தங்கவேல் ஐயா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா மன்றத்தினால் கட்டிமுடிக்கப்பட்ட சனசமூக நிலையம் ஈறாக மன்றத்தினால் உதவி வழங்கப்படும் பாடசாலை உட்பட மன்றத்தின் அனைத்து செயற்பாடுகளுக்கும் பெருமளவு நிதிப்பங்களிப்பை செய்தது மட்டுமல்லாமல் தன்னால் இயன்றவரை மற்றவர்களிடமிருந்தும் நிதியினை பெற்று மன்றத்திடம் ஒப்படைத்தவர். தனது தலைமைக்காலத்திலும் அதற்கு பிற்பட்ட காலத்திலும் தன்னாலான ஒத்துழைப்பை மன்றத்திற்கு வழங்கி தலைவர்கள் எல்லோருக்கும் ஒரு முன் மாதிரியான தலைவராக விளங்கியவர். எங்கள் தங்கவேல் ஐயா! எங்கள் தங்கவேல் ஐயாவின் இழப்பு எம்மால் ஈடு செய்யமுடியாத இழப்பு என்பதனை எமது மன்றம் நன்றாக அறியும் அவர் எமக்குக் கற்றுத்தந்த வழியில் எமது மன்றம் தொடர்ந்தும் இயங்கி செம்மண்ணின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என்பதனை உறுதி கூறுகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி எல்லாம் வல்ல கற்கரை கற்பக விநாயகனை பிரார்த்திப்போமாக..............

**குப்பிழான் விக்கினேஸ்வரா மக்கள் மன்றம்-கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உள்ளத்தில் உறைந்த தம்பி

என் உள்ளத்தில் உறைந்த தம்பி தங்கவேல்! அவசரமாய் ஓடியது எங்கே? தேடுகிறேன். இனி எங்கே காண்பேன்? நீ ஒரு சுமை தாங்கியாகி உள்ளச்சுமையையும் இறக்கி வைப்பாய். மிடியால் வருந்துவோரின் துன்பச்சுமைகளையும் தாங்கி உதவும் தங்கக் குணமுடைய தங்க மகன் உற்றார் சுற்றம் உறவைப்பேணி அற்றார்க்கும் அள்ளிக் கொடுக்கும் அற்புதச் சுரங்கம். நெஞ்சில் உரமும் நேர்மைத்திறமும் செஞ்சொல்லும் சேவை மனப்பான்மையும் தலைமை தாங்கும் இயல்புங் கொண்ட உத்தமர். எங்கள் விக்கினேஸ்வரா மக்கள் மன்றத் தலைவராகப் பணியேற்று அற்புதமாகப் பணிபுரிந்த அற்புத செயல் வீரர். இன்னும் விக்கினேஸ்வர மகா வித்தியாலய அபிவிருத்திக்காவும் சனசமூக நிலையம் திறம்பட நிறுவுவதற்காகவும் எங்கள் பிள்ளைகளோடு தோளோடு தோள் நின்று அயராது உழைத்தீர்கள் மறக்கமுடியுமா? கிராமத்து ஆலயங்கள் வளர்ச்சியிலும் முன்னின்று உதவி புரிந்தீர்கள் தம்பி! என்னோடு அடிக்கடி கதைக்கும் போது உங்கள் உத்தமக் குணத்தை எண்ணிப் பூரிப்படைவேன். எம்மூர் என்று இல்லை எம்மண்ணில் எங்கும் இருக்கும் அனாதை இல்லங்களுக்கும் அள்ளிக் கொடுக்கும் தர்ம சிந்தையை எண்ணிப்பூரிப்பேன். எம் பாடசாலையில் படிக்கும் மாணவர்களின் எதிர்கால முன்னேற்றம் கருதி குறிப்பிட்ட சில மாணவர்களுக்கு வங்கியில் பணம் வைப்பீடு செய்தீர்கள் பெருமை அடைகிறேன்.

பிரம்டன் தமிழ் முதியோர் மன்றத்தில் பணிபுரியும் போது மிகவும் மகிழ்ச்சியோடு மனப்பூர்வமாகப் பணியாற்றினீர்கள். எல்லோர் மனத்திலும் நீங்காத இடம் பிடித்தீர்கள். அன்று என்னையும் ஒரு பொருட்டாக மதித்து என் சிறுகதையையும் சஞ்சிகையில் வெளியிடச் செய்த என் அருமைத் தம்பி! உன்னை எண்ணி எண்ணிப் போற்றுவேன். எழுத்துத்துறையில் கவிதைகள், கட்டுரைகள், கதைகள் எழுதி உங்களிடம் வாசித்துக் காட்டும் போது சில அபிப்பிராயம் கூறித்தட்டிக் கொடுத்து உற்சாகமாக எழுதச் செய்வீர்கள். இன்றும் " ரொம்ப நல்லது எழுதுங்கள்" என்று என்னை உற்சாகப்படுத்தும் தம்பி! இனி எங்குதான் காண்பேன். ஒரு கூட்டில் பிறக்கவில்லையென்றாலும் உடன் பிறப்பால் என் உள்ளத்தில் உறைந்த தம்பி கடவுளின் பாதத்தில் சாந்தியுடன் வாழ்வாயாக!

**அக்கா**

**திருமதி. தங்கமுத்து தம்பித்துரை**

**(ஓய்வு பெற்ற ஆசிரியர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மண் தந்த தவப்புதல்வர்

செம்மண் புதல்வா
செம்மண் தந்த
தங்க தலை வா
மண்ணை விட்டு
விண்ணை நோக்கி
ஓடி சென்றதேனோ- நீயும்
சொல்ல வா

செம்மை வழியில்
எம்மை வழி நடத்தி
பார் எங்கும்
மன்றத்தின் புகழ் பரப்பி
புகழுக்கு வாழாமல்-உன்
பூதவுடல் விட்டு
எங்கே சென்றாய் நீயும்
சொல்லவா

மன்றத்தின் அரணாய்
அற வழியில்
வழி நடத்தி சென்றவனே
உன் வழி நாம் சென்று
உன் கனவை நனவாக்கி - வரும்
இடர்களை துடைத்தெறிவோம்
எம் தலை வா

**சி.மேகவர்னன்**
**(மார்க்கோனி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருள் மாணிக்கம்

மனிதருள் மாணிக்கம் என்னும் சொல் பலராலும் பேசப்படும் ஒரு வார்த்தை அந்த உன்னத வார்த்தைக்கான அர்த்தத்தையும் அப்படியான ஒரு மனிதரையும் என்னால் பார்க்க முடியுமா? என பல தடவைகள் யோசித்ததுண்டு. ஆனால் எனது மதிப்புக்குரியவரும் நலன் விரும்பியும் ஆசானுமாகிய திரு தங்கவேல் அண்ணாவுடன் பழகிய பின்னர் அதற்கான விடையும் கிடைத்தது அந்த மாணிக்கமும் அவர்தான், என்பதனை மனதார உணர்ந்து கொண்டேன்.

ஆளுமை பண்பு, மனிதாபிமானம், கடின உழைப்பு, எளிமையான போக்கு அனைத்திற்கும் அதிபதியான அண்ணா அவர்கள் குப்பிழான் விக்கினேஸ்வரா மக்கள் மன்றம் கனடாவின் முதற்தலைவராக இருந்து மனறத்தின் புகழை உலகறியச் செய்தவர். அவர் போன்றவர்கள் தலைமையில் மன்றம் பெருமை அடைந்தது. தலைமைக்கு பின்னரும் இறுதிவரை மன்றத்திற்காக உழைத்த உத்தமர்.

அவருடைய காலத்தில் அவருடன் நானும் சேர்ந்து பயணித்த காலம் எனது வாழ்வில் ஒரு பொற்காலம் என்று தான் சொல்வேன். மணிக்கணக்காக பேசுவோம் பல தடவைகள் சந்திப்போம் கலந்துரையாடுவோம்.இவைகள் யாவையும் என்னால் அசை போட்டு பார்க்கத்தான் முடியும். கடந்த பல வருடங்களாக அவருடைய இனிய காலை வணக்க செய்தியுடன் தான் எனது நாள் ஆரம்பித்து நிறைவுறும். எனது பதில் கிடைத்ததோ? இல்லையோ? அடுத்தநாள் காலையிலும் காலை வணக்கசெய்தி என்னை வந்தடையும். அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்ற வள்ளுவரின் வாக்குக்கு அர்த்தம் கொடுத்தவரும் அவர்தான்.

உண்மையில் அவருடைய வரலாற்றை ஒரு புத்தகமாகக்கூட வெளியிட முடியும் எங்கள் இருவருக்கும் இடைப்பட்ட உறவு என்பதனை என்னால் பெருமையாக சொல்லிக்கொள்ள முடியும். அவருடைய பூதவுடல் என்னையும், மண்ணையும் விட்டு நீங்கினாலும் அவர் நினைவலைகள் ஒரு பொழுதும் என்னை விட்டு நீங்காது.

அண்ணா அவர்களை பற்றிய சிறிய ஒரு பதிவை விளக்குவதற்கு சந்தர்ப்பம் அளித்த குடும்பத்தினர்க்கு எனது மனமார்ந்தநன்றிகள்.

பொன்-சிவா

(ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பிளான் கிராமத்தின் உத்தமர்

எமது குப்பிளான் கிராமத்தின் உத்தமர் அன்புக்குரியவர் திருவாளர் கதிரிப்பிள்ளை தங்கவேல் அண்ணா தன்னலம் இல்லாது பொது நலம் கொண்டு எம் மண்ணை நேசித்த பெரியவர் அனைவரின் பெருமதிப்புக்கு உரிய பண்பாளனாக கிராம பற்றாளனாக எம்முடன் கூடி வாழ்ந்து 02.05.2021 எம் பெருமான் பாதார விந்தங்களை பற்றிக்கொண்டு சிவபதம் எய்தினார். திருவாளர் தங்கவேல் அவர்கள் குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் தன்னுடைய ஆரம்பக்கல்வியை ஆரம்பித்து அதன்பின் தெல்லியூர் யூனியன் கல்லூரியிலும் தொடர்ந்தார்.

அந்நாளில் பாடசாலை உதைப்பந்தாட்டகளகத்தில் சிறந்த கோல் காப்பாளராக விளங்கிய வரலாறும் உண்டு பின்னாளில் யாழ் இந்துக்கல்லூரியில் கல்வி பயின்று சிறப்பு நிலையை அடைந்தார். அடக்கமான மனிதருக்கு உதாரணமாக வாழ்ந்தவர் தனி ஆண்பிள்ளையாக ஐந்து பெண் சகோதரர்களுடன் அவதரித்தவர். உடன் பிறந்தாரையும் அன்புத்தாயாரையும் தனது அரவணைப்பில் அகம் மகிழ வைத்த சிறந்த தாய் போற்றும் மகனாக அண்ணனாக வாழ்ந்த பெருமைக்கும் உரியவர். அந்நாட்களில் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமண பந்ததத்தில் எமது கிராமத்தின் திருவாளர்கள் செல்லையா காந்திமதி தம்பதிகளின் செல்வி தனலட்சுமி அவர்களை இருமனம் விரும்ப இனிதே இணைந்த தம்பதிகளாக திருவாளர் தங்கவேல் அண்ணா மிகச்சிறந்த இல்லற வாழ்க்கையை கரம்பிடித்த மனையாளுடன் "வையகத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறை தெய்வத்துள் வைக்கப்படும்" எனும் வள்ளுவன் வாக்குக்கு அமைய மூன்று மழலைகளையும் பெற்று இனிதே வாழ்ந்த பெரியவர். தனது இளம் வயதிலேயே குப்பிளான் கற்கரைகற்பக விநாயகர் மேல் பெரும் பற்றுக்கொண்டார். தன்னை தானாகவே ஆலய பரிபாலன சபையில் ஒரு அங்கத்தவராக தன்னை இணைத்துக்கொண்டு பின்னாளில் ஆலய நிர்வாகத்தின் செயலாளராகவும் இருந்து ஆலயப்பணி ஆற்றியவர். காலத்தின் கட்டாயத்தால் கனடா நாட்டில் குடியேறி இங்கு புலம் பெயர்ந்த குப்பிளான் மக்களுக்காக அமைக்கப்பட்ட கனடா குப்பிளான் மக்கள் மன்றத்தின் தலைமையை ஏற்று மன்றத்தை வழிநடத்திய பெரியவர். புலம் பெயர்ந்ததும் கற்கரை கற்பகனாரை மறக்காமல் இறுதி வரைக்கும் எம்பெருமான் ஆலய வளர்ச்சிக்கு தன்னாலான பங்களிப்பை செய்து கொண்டு வாழ்ந்தவர். அவருக்கு பின்நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தலைமையின் கீழ் கனடா மன்றத்தால் புலம் பெயர் மககளின் உதவியை பெற்று அமைக்கப்பட்ட சனசமூக நிலைய கட்டிடம் அமைத்து முடியும் வரைக்கும் மன்றத்துக்கும் தலைமைக்கும் தொடர்ந்து ஊக்கம் தந்த பெரியவர். அன்னார் கனடா மன்றத்தின் தலைவராக இருந்த காலத்தில் மன்றம் சார்பாகவும் தனிப்பட்ட வகையிலும் குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலத்தின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றிய கோமகனார். அவர் பெருமையை எமது கிராம மக்கள் என்றும் மனதில் கொள்வார்கள். அவர் ஆத்மா சாந்தி பெற வேண்டும் என நானும் அவர் வணங்கிய கற்கரை கற்பகனார் அருள் வேண்டுகின்றேன்.

ஓம்சாந்தி ஓம் சாந்தி

**இப்படிக்கு**
**நாகையா பாலசுப்பிரமணியம் (அப்பன்)**
**கனடா மன்றத்தின் முன்னாள் தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நிறைந்தவர் பிரிவுத்துயர்

**மதிப்புக்குரிய பெரியோன் அமரர் கதிர்ப்பிள்ளை**
**தங்கவேல் அவர்கள்**

கருணையுளம் கொண்ட காலமெல்லாம் களிப்புற
கதிரவன் போல் வாழ்ந்திட கண்ணிய வாளரை,
காலன் கவர்ந்திட்ட கலங்கிய காலமிதை
கண்ணீர்மல்க மலர் அஞ்சலி செய்கிறோம்.

அன்பான தங்கவேல் எனும் பெயருக்கேற்ற
அன்புகொண்ட தங்கமான இரக்கமுள்ள நெஞ்சார்.
அன்புச்சிரிப்பதனால் அனைவரையும்,
ஆழமாக நேசித்த அற்புத பண்புடையோன்
ஆழமான அறிவனைத்தும் அளவின்றி தன்னகத்தே
ஆற்றலாக அடைந்திருந்த கல்வியறிவுடையோர்

ஆங்கிலக்கல்வியில் ஆற்றல் நிறைந்த நிறை கல்வியாளர்
ஆற்றல்மிகுதியால் அரசுதிணைக்களத்தில்
அதி உயர் பதவிகள் வகித்து அளப்பரும் பணியாற்றி
அனைவரினதும் பாராட்டைப்பெற்ற மேதையிவர்
அயராது உழைத்து அருமைக்குடும்பமதை

அன்பினால் வளர்த்தாளாக்கி
அவர் தமை ஆற்றல் மிகு வித்தகராய் பார்போற்றி
அன்பினால் ஆரத்தழுவி வளர்த்திட்ட அருமைத்தந்தையிவர்

அன்புப்பேச்சும் அழகுச்சிரிப்பும் ஒருங்கேயமைந்து,
அனைத்து ஊர்மக்களையும் தன் சுயநலமற்றபணியால்
அணைத்து வாழ்ந்த அற்புத பண்புள்ள பண்பாளர்
அனைத்து ஊர்மக்களினதும் நெஞ்சில் நிறைந்த உத்தமர்

எவர்க்கிடர் வந்தாலும் எதையுமே சிந்திக்காது
எத்தனை உதவிகள் தேவையோ அத்தனையும்
எவ்வித தயக்கமின்றி உதவிடும் தாராள குணம் படைத்த
எளிமையான நல் இரக்கம் கொண்ட இதயத்தவர்

ஊரின் முன்னேற்றத்தில் தன்னாலியன்ற பணியனைத்தும்
ஊக்கமுடன் முயற்சி கொண்டு அயராது உழைத்தவர்
உன்னதமான அற்புத ஆற்றலும் பண்பு கொண்டவரை
உயரிய நல்லவரை ஊரிழந்து தவிக்கிறதே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை இழந்து தவியாய் தவிக்கும்
அவர் தம் அன்புயிர் குடும்பத்தவர்க்கும்
அவர் மேல் ஆற்றா அன்புநிறை உறவினர்க்கும்
அனைத்து ஊர்மக்கள் சார்பிலும்
அளவின்றிய ஆறுதலும் ஆழ்ந்த அனுதாபங்களும் தந்து
அவர் தம் ஆத்மா சாந்தியடைய அனைவரும்
பிரார்த்திப்போமாக...........

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

**சுவாமி நாதர் நந்தன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாங்கமுடியாத பேரிழப்பு

தங்கவேல் அவர்கள் இறந்த செய்தி கேட்டு நானும் எனது குடும்பமும் அடைந்த சோகமானது எனது வாழ்வில் என்றும் ஏற்படாததொன்றாக என்மனதில் பதிந்து விட்டது. என் வாழ்வுடன் பிணைந்து விட்ட அவரது வாழ்வின் நினைவுகள் சொல்ல முடியாத பெருங்கதை ஆகும். எல்லாம் என் மனக்கண்முன் நிழலாடி எங்கள் கண்களைக் குளமாக்குகின்றன.

நட்பிற்கு இலக்கணம் வகுத்தவர் மறைந்த தங்கவேல் நண்பர். 1977ஆம் ஆண்டு எனது தொழில் மாற்றம் கிளிநொச்சிக்கு கிடைத்த நாட்கள் தொடங்கிய எங்கள் நட்பு அவரது இறுதி நாட்கள் வரை தொடர்ந்து எனது வாழ்வின் நன்மை தீமைகள் யாவும் அவரது இணைப்பு கலந்திருந்தமை என்னுள் மறக்கமுடியாது.

புதிய அலுவலகத்தில் எனக்கு வழிகாட்டியாக பழகிய அன்னாரது இணைப்பு என் சொந்த வாழ்வில் இணையத் தொடங்கியது. எனது தந்தையார் இறந்த போது கலங்கிய என்னை அழைத்து ஆறுதல் தந்து அவரது இறுதிக்கிரியை முடியும் வரை எமது இல்லத்தில் தங்கி உதவியதை மறக்கமுடியாது. பண நெருக்கடியில் துவண்டபோது என்னை தூக்கி நிறுத்திய அன்புக்குரியவர்.

மனக்கவலை ஏற்பட்ட வேளையில் கலந்திருந்து தனது வாழ்நாள்பட்ட துன்பங்கள் எனக்கு கூறி எனது துன்பம் சிறிது என விளக்கி ஆறுதலளித்த அந்த நிகழ்வுகளை என் மனதில் நிழலோடிக் கொண்டிருக்கின்றது. உத்தியோகத்தில் பலதடவைகள் பிரச்சினைகள் ஏற்பட்ட போது தனியாக நின்று அவற்றைத் தீர்த்து என்னைப் புடம்போட வைத்த பேராளன்.

கிளிநொச்சி காவல் நிலையம் தாக்கப்பட்ட நேரம் எனது ஐந்து பிள்ளைகளுடன் காவல் நிலையம் அருகில் வாழ்ந்த போது எனது பிள்ளைகளை தானே பாதுகாப்பிடத்திற்கு தூக்கிச் சென்று அவர்களுக்கு ஆறுதலளித்து அன்பூட்டியமை, என்னால் மறக்கமுடியாத நிகழ்வாகும்.

நான் அரசியலில் ஈடுபட்ட காலங்களில் எனது உத்தியோகத்திற்கும் எனது குடும்பத்தினருக்கு உதவியாளராகவும் ஆலோசகராகவும் இருந்தமை, என் கண்முன் நிழலாகுகின்றது. மாற்றலாகி சென்று விட்டாலும் இருவரும் இணைபிரியாது ஒரு உடன் பிறப்பாக என்னைத் தாங்கிக் கொண்ட பேராளன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வெளிநாடு வருவதற்கு ஆலோசனையும் உதவியும் செய்து அனுப்பிவைத்து எனது குடும்பத்தின் காவலாளராக இருந்த உத்தமன். வெளிநாட்டிலும் என்னைத் தொடர்ந்து வெளிநாடு வந்து தோழமையை தொடர்ந்து நன்மை தீமைகளில் பங்கெடுத்தமை மறக்கமுடிவதில்லை.

ஒருமுறை அவருக்கு சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது இதயத்தை திறந்து என்னை ஆறாத்துயரில் ஆட்படுத்தியவர். தனது குடும்பத்தினர் வந்ததும் பிள்ளைகளின் படிப்பு, திருமணம் எத்தனையும் எனது பிள்ளைகளின் படிப்பு, திருமணங்களுடன் ஒன்றிருந்து நேசித்து தனது அன்பைச் சொரிந்தவர்.

இறுதி நாட்களில் வைத்தியசாலையில் இணைந்த போது இரவில் தொலைபேசியில் தொடர்ந்து கொண்டோம். பழையன அனைத்தும் மீட்டுக்கொண்டு சுகமாக காலன் கைவிடப்பட்ட எவருக்கும் கிடைக்காத மார்க்கமெனக் கருதுகின்றேன். இந்த காலங்களில் நேரடியாக போக பார்க்க முடியாத ஒரு நிலை எனக்கேற்பட்டதால் அது எனக்கு ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தியமை என்னுள் தாங்கமுடியாதுள்ளது.

எனினும் அவரின் நடப்பு பாரதியார் காலத்தில் வசனங்கள் எனக்கு ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

"நண்பராய், மந்திரியாய், நல்லாசிரியனுமாகிய பண்பிலே தெய்வமாய் பார்வையில் சேவகனாய், எங்கிருந்தோ வந்து இடைச்சாதி நானெயுருள்" என்ற வாக்கியத்திற்கு இலக்கணமாக என்பதுடன் பின்னிப்பிணைந்து என்பர். நண்பரின் பிரிவு ஆற்றெடுத்ததொன்று.

அன்னாரை இழந்து தவிக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு ஆறுதல் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கலியுகப்பெருமான் ஐயன் ஐயப்பனை வேண்டுகின்றேன்.

*நண்பன் நா. சுப்பிமணியக்குருசாமி*

*ஐயப்பன் இந்து ஆலயம்*

*கனடா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்காவுக்கு எம் இதய அஞ்சலி

தங்கமான மனசு தங்காவுக்கு அவருடான அவர் அன்றைய அந்த நாட்களை இன்றும் நினைக்கையில் பொன் வசந்தம் போல் நறுமணம் வீசிய அந்த நான்கு வருடங்கள் என்றும் அழியா இனிய காலங்களாய் எம்மனதில் நிலைபெறும். கிளிநொச்சி தனி மாவட்டமானதன்பேரில் 1984ல் ஒரு குழுவாக கிளிநொச்சி கரடிப்போக்கில் புதிய கச்சேரி ஒன்றை திறந்து வைத்தபோது அந்தக்குழுவில் தங்கவேல் எம்மோடு முருகனால் அனுப்பப்பட்ட தங்கவேல் ஆக எமக்கென்று தரப்பட்டிருந்தரோ தெரியாது. கிளிநொச்சி பஸ் நிலையம், போலீஸ் நிலையம் தாண்டி A9 வீதியில் ஓரிரு அரச வதிவிடங்கள், அதில் ஒன்றில் நாமும் மேலும் ஆறேழு சக கச்சேரி ஊழியர்களுமாக இரவும் பகலும் நகைக்கும் சுவைக்கும் பஞ்சமே இருக்கவில்லை. எம்மிடையே அதற்கான காரணகர்த்தா எப்போதும் எமது கதிர் தங்கவேல் என்றால் மிகையாகாது. ஆம் அவர் இன்று எம்முடன் இல்லை.

சொல்ல வேண்டியதை நாசூக்காக சொல்லி விட்டு மௌனமே மொழியாக நகைப்பின்றி இருக்கும் தங்காவை என்னவென்று சொல்ல நாம் விழுந்து விழுந்து சிரிக்கும் சிங்காரத்தைக் கண்டு தனக்குள் புளகாகிங்கிதம் கொள்ளும் எம் உறவு அந்தக் கதிர் ஆம் அவர் இன்று எம்முடன் இல்லை.

தினமும் கரடிப்போக்கு வரை காலையும் மாலையும் கால் நடையாய் நாம் அந்த 3 மைல் தூரத்தை மகிழ்வாகக் கடந்தமைக்கு இந்த கதிர் வேலன் கூட வந்தமையே காரணமாம். எம்மோடு கூட வந்த ஓரிரு பெண் அரசிகளின் நயனத்துக்கு ஏற்றாற் போல் நாதஸ்வரம் வாசித்த தங்கமான மனசு கதிர். ஆம் இன்று எம்முடன் இல்லை.

மதியத்தில் வேலப்பனின் அந்த மொட்டைக் கறுப்பன் குத்தரிசிச்சோறும் பொரிச்செடுத்த மீனும் அனைவரையும் கிளிநொச்சி அனல் வெக்கைக்குத் தாக்குப் பிடிக்க வைத்திருந்தது. ஆஹா காப்புக் கை இல்லா விட்டாலும் இந்த வேலப்பனின் கறுப்புக் கையும் ருசியேதான் என்று கூறிய தங்கா இன்று எம்முடன் இல்லை.

நாம் அங்கு வாழ்ந்த காலத்தில் ஒரு அரச நிறுவனம் என்பதற்கும் அப்பால் ஒரு கூட்டுக் குடும்பமாகவே இயங்கினோம் என்றால் மிகையாகாது. இரவில் எந்நாளும் உண்ணும் அதே அச்சுப் பாணும் டின் மீன் குழம்பும் சுவை தந்தமைக்கு பதமாகத் தேங்காய் பால் பிழிந்து கொடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை தங்காவையே சாரும். ஆம் இன்று எம்முடன் இல்லை.

மாலையிலும் குவாட்டேர்ஸில் பலருக்கும் பொதுவான கிணற்றடியில் அயல் நட்புக்களுடன் கூடி அடிக்கும் அரட்டை அரங்கில் நடுவர் பொறுப்பு எம் தங்காவினதே. சரியோ பிழையோ அன்று தங்காவின் சொல்லுக்கு அத்துணை மவுசும் மரியாதையும் ஆம் அவர் இன்று எம்முடன் இல்லை.

கிளிநொச்சி போலீஸ் நிலையம் தாக்கப் பட்டு போராளிகளுக்கும் போலீஸ் நிலையத்துக்கும் இடையில் மாட்டுப் பட்டு நாம் தவித்து இருந்த வேளையிலும் தங்காவின் தார்மீக சொல்லாடல் எம் இதயங்களை இயங்க வைத்தது எனலாம்.

அடுத்த நாள் காட்டு வழியே முரசுமோட்டையை நோக்கித் தப்பி ஓடுகையிலும் கூட எவரும் தவறிப் போகாது காத்து வந்த தங்கா ஒரு தந்தையின் ஸ்தானத்தில் வைத்து பார்க்கப்படுகின்றார். ஆம் அவர் இன்று எம்மோடு இல்லை.

கனடா வந்த பின்னரும் கூட எமக்கிடையேயான அன்புப் பிணைப்பு இன்னும் ஆழமாக வேரூன்றியது என்றே கூறலாம். மற்றவர்களின் உயிர் காக்க எம்மோடு காப்புறுதி முகவராகிக் கரம் கோர்த்தார். ஆம் அவர் இப்போது எம்மோடு இல்லை.

"அழகான பூக்கள் தான் ஆண்டவனின் பூசைக்காய் மலர் வனத்தில் இருந்து பறிக்கப்படுகின்றனவாம்" எங்கள் தங்கமான வேல் இப் பூவுலகில் இன்னும் கொஞ்சக்காலம் எம்மோடு கூடி வாழ ஆண்டவன் அனுமதித்திருக்கலாம் என்பதுவே என் மனதில் ஜீரணிக்க முடியாத கவலையாய் அமைகின்றது.

தங்காவின் ஆத்மா சாந்தியடைய எமது இதய அஞ்சலிகள்

**இங்ஙனம்**

**கனத்த உள்ளத்துடன் விடை கொடுக்கும்**

**கிளிநொச்சி கச்சேரி ஊழியர்கள் சார்பில்**

**அருண் செல்லப்பா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY FRIND THANGA

write this with great sadness over the unimaginable loss of "one of a kind" of a close friend. He is Mr. Thangavel, vice president of Brampton Tamil Seniors Association which he held for 5 years. I, as the President of the above association, we worked very closely throughout his time.

In addition, Thanga was the chairman of our association's Grant advisory committee. A backbone committee that manage the operation of Government grants to our association. Not one but he managed many grants projects simultaneously.

This gentle person, inside and out, was a wonderful friend to me, supporting me for over five years at the association with his gentle and caring nature. One of his beliefs in life was the importance of being authentic with people, saying what needs to be said because it's good for the friendship and for the soul. Unfinished business causes pain and having peace is essential for a healthy and joyful life. Also, I always admired how he never judged or forced his opinions on anyone but offered valuable and truthful advice that we all will surely miss.

Thanga, we fondly called him, was loved by all. He was there as a peace maker and resolved many issues within the association. I remember once he was telling me, "Look at me", meaning that you never know in life so make change even though it's tough,do the things you want to do and dream about before it's too late. Thanga will be clearly missed by all the members of the association. He built very close friendship with all. His greatest joy were the members of the association, he always referred them as his family. He enjoyed watching them performing activities and then quietly go to them and comment where they are going good or bad, what things will improve their performance etc.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Now my hope is that he rests in peace knowing he did all that he could and that his friends, children, and the association will be fine.

**No Farewell words were spoken**
**No time to say good-bye**
**You were gone before I knew it**
**And only God knows why.**

**David Rajaratnam**
**President Brampton Tamil Seniors**

# Appreciation to late Mr. Kathir Thangavelu

The biggest enemy of our life is death which we can never win. Nothing can fill the emptiness of our hearts that has been created by the demise of a very close friend, relation or a close associate. In our dream, prayers and thoughts we always hear the words of our late Kathir Thangavel saying that " all my pain has gone and I am now in the safe hands of the Almighty, please don't cry for me, this is not the end I will be waiting here for you all until we meet again" So we all have to comfort ourselves and waiting for our turn to join the soul of our late Kathir Thangavel. This is the reality.

I am really fortunate to have associated with my friend the late Thangavel Kathir. Though I came to know him when I joined the Brampton Tamil Seniors Association six years back we used to discuss matters starting from our infancy there by I always feel that I have been a friend of him from infancy. He studied at Jaffna Hindu College a leading school in Srilanka and there he was a boarder. He used to share his college and boarding experiences with me. Soon after his school career he chose to join the Government service in Srilanka which is a dream for most of the middle class citizens in Srilanka. Having joined the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Government service he served in various parts of Srilanka and there he studied men and matters and his vision and passion was to serve the people and he has succeeded in his vision. Every one of us know that he came up inlife through his hard work , honesty, sincerity, integrity coupled with his human approach. I would like to mention about his contribution to our Brampton Tamil Seniors Association.

He was unanimously elected as the vice president of our society six years back and he discharged his duties to the satisfaction of all the members till his last breath. He was the most respected office bearer in the Board of Directors and he commanded the respect of all his colleagues and he was respected as a paterfamilias ( Head of the family ). Even during his last days of his life he used to call me everyday and inquire about the progress of our society. Though he was a kind hearted and a soft natured person he was very firm in his convictions and policies. He always put the welfare of our members in the first place and he always fought for the rights of each and every member. His untimely demise has not only created a vacuum but also shook the

foundation of our association and we are unable to find a substitute for his place. At the conclusion I would like to say that he lived a family bonded exemplary life and elevated all his children to high academic stature and taught his wife and children to lead a descent and meaningful life. His untimely demise is a great loss to his family and to the Brampton Tamil Seniors Association. We all should jointly pray for his soul to rest in peace.

**Murugesu Krishnapillai. J P.**
**Attorney – at- Law & Notary Public**
**Solicitor ( England & Wales )**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனின் முன்னுதாரணமான வாழ்வுநெறி

இறைவன் மனிதர்களுக்கு கொடுக்கும் பரிசு மரணம் என்று அறிஞர்கள் சொல்லுவார்கள். அது எமது நண்பர் தங்கவேலுவிற்கு சடுதியாக கிடைக்கும் என்று நாம் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. ஒரு குறுகிய காலத்தில் நோய் வந்து அவரை எம்மிடம் இருந்து பிரித்து விட்டது. இதனை எம்மால் இன்று வரை ஜீரணிக்க முடியவில்லை. திரு தங்கவேலை எமக்கு கடந்த நான்கு வருடங்களாகவே தெரியும். நாம் பிரம்டன் தமிழ் மூத்தோர் கழகத்தில் சேர்ந்த போது அச்சங்கத்தின் உப தலைவர் பொறுப்பில் இருந்த திரு தங்கவேல் எம்மை மிகவும் அன்பாக வரவேற்று பல உதவிகளை எமக்கு வழங்கினார். அன்றிலிருந்து அவருடன் நாம் ஒரு குடும்ப உறுப்பினர் போலவே உறவாடினோம். இந்த கொறோனா காலத்தில் கூட ஒவ்வொருநாளும் தொலைபேசியில் அவரின் அன்பு தொடர்பு இருந்தது.

திரு தங்கவேல் போன்று பண்புடனும் அமைதியுடனும் இருந்த ஒருவரை நாம் வாழ்க்கையில் சந்திப்பது மிகவும் அரிது. கடந்த மூன்று வருடங்களாக ஒவ்வொரு கிழமையும் நாம் அவரை சந்திக்க தவறுவதில்லை. பழகுவதற்கு இனிமையான ஒரு நண்பனை சடுதியில் இழப்பது எவ்வளவு கொடுமை என்பதை எமக்கு உணர்த்திவிட்டு சென்று விட்டார்.

"இருந்தாலும் இறந்தாலும் பேர் சொல்ல வேண்டும் இவர் போல் யார் என்று ஊர் சொல்ல வேண்டும்" என்ற கூற்றுக்கு அமைய எமது சங்கத்தில் இவரால் அடிக்கடி கூறப்படும் நன்றி என்ற வார்த்தை எமது செவிப்பறைகளில் ரீங்காரம் இட்டுக் கொண்டே இருக்கிறது.

ஒரு சிறப்பான வாழ்க்கையை தனது மனைவி மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் சுற்றத்தார் அனைவருடனும் வாழ்ந்து காட்டிவிட்டு இந்த உலகம் யாருக்கும் சொந்தமில்லை என்பதை எமக்கு உணர்த்திவிட்டு எம்மை விட்டு பிரிந்த உங்களின் ஆத்மா இறைவனின் நிழலில் இளைப்பாற பிரார்த்திக்கிறோம்.

அன்பு நண்பா உங்களின் விண்ணுலக பயணம் இனிதாகவும் அமைதியுடனும் இருக்கட்டும்

*சி. திருஞானசோதி*

*பத்மினி திருஞானசோதி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையின் ஓர் அடையாளம்

அமரர் கதிரிப்பிள்ளை தங்கவேலு அவர்கட்கான அஞ்சலி உரை ஒன்றினை நிகழ்த்த வேண்டும் என்ற மேலான எண்ணம் அவர் காலமான உடனேயே என் மனதை வருடியது. ஏனெனில் 2015ம் ஆண்டு நான் முதன்முறையாக சங்கத்தில் பிரவேசித்தேன். சங்க நடைமுறைகளைச் சீரமைக்க யாப்பொன்றின் அவசியம் பற்றிக் கலந்துரைத்தேன்.

இக் கழகத்தின் விரிவாக்கத்தை எல்லா அங்கத்தவர்களும் மனதார செவிமடுத்துக் கொண்டிருந்தனர். எனது முழுமையான விளக்கம் நிறைவடைய உடனடியாகவே ஒருவர் எழுந்து நின்று எனது யாப்பு விளக்க விரிவாக்க உரையை ஏற்று முன்மொழிவுடன் ஓர் அங்கீகாரத்தை வழங்கினார். அன்றைய முன்மொழிவின் போது தான், இவர்தான் கதிரிப்பிள்ளை தங்கவேலு என அடையாளம் கண்டேன்.

அன்று தொட்டு இவர் மீதான பார்வை படிப்படியாக அதிகரித்த வண்ணம் இருந்தது. இதன் என் நோக்கிய நிலையில் இருந்தே அவதானிப்புக்கள் காரணமாக இவரை 2017ம் ஆண்டு கடந்த பிரம்டன் தமிழ் மூத்தோர் சங்க நிர்வாக சபைத்தேர்தலில் உப தலைவராக நானே முன்மொழிந்தேன். இத் தெரிவு என்பது எனக்கான சுயநலன் சார் வழிமுறையில் மேற்கொள்ளப்பட்ட தொன்றல்ல. பொது வெளியிலும் சமூகத் தொடர்பாடல்களின் வழிமுறையில் பிறப்பெடுத்த நல் நோக்க சிந்தனையாகும்.

சமூகமயமாதலில் எம் இருவர்க்கும் இருந்த சுயநலமற்ற ஒருமைப்பாடு இப்போது வெளியில் எம்மை இணைய வைத்தது. இதற்காகவே அமரர் தங்கவேலு உப தலைவராக்கப்பட்டார். இவரது இப் பொறுப்பான இப்பதவி ஏற்பு என்பது சங்க நிர்வாகத்தின் சுயாதீனத்துவத்தை பெற வைத்தல் என்ற கோட்பாட்டில் இருந்தது. இப்பதவிக்கான இவரது செயன்முறைக்கான குணாம்சங்கள் பதவிக்கேற்றாற்போல் இருந்தன. இவரிடம் இருந்த நம்பகத்தன்மை, பொறுப்புகூற வைக்கும் திடமான செயற்பாடு, நல் எண்ணங்களை பகிர்ந்து கொண்டால் நல் எண்ணங்கள் இருக்கும் என நம்புதல். எல்லோரையும் நம்புவது பயங்கரமானது பலரையும் நம்பாமல் இருப்பது அதிபயங்கரமானது என அனைவரையும் அரவணைத்தவர். நான் பொதுவாக நடப்பவன்தான் ஒரு போதும் தடுமாறுவதில்லை என நடந்தவர். அரியணைக்கு ஆசைப்பட்டதில்லை. அரியணையை ஆராய்ந்தவர். கோபத்திலும் பொறுமையாகப் பதவியிலும் பணிவாக இருந்தவர். அவசரப்பட்டு வாழ்வை வீணாக்காதவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரிடம் கண்ணை உறுத்தும் எண்ணங்களோ திடுக்கிடவைக்கும் திருப்பங்களோ இல்லாவிட்டாலும் தெளிவான சிந்தனையாளனாக இருந்தவர். பிறர் எம்மை எப்படிப் பார்க்க வேண்டும், என்பதை விட பிறர்க்கு முன் எப்படி இருக்க வேண்டும். என்பதை விரும்பியவர். இல்லாமை குற்றமல்ல, இயலாமை குற்றமல்ல விரும்பாமையே பாவம் என எண்ணியதாலேயே ஏகமானதான தீர்மானங்களை ஏற்று மறுப்புத் தெரிவிக்காமல் பல தடவைகள் சங்க நிர்வாகத்தில் பொறுப்பான பதவியைப் பெற்று பொறுப்புடன் செயலாற்றினார்.

சங்கத் தலைமைக்கு விசுவாசமாக இருந்தார். விசுவாச செயற்பாடே சங்க வளர்ச்சிக்கு வழிவகுக்கும் எனப் பணியாற்றி வளர்ச்சியினைக் கண்டார். இப் பெருவளர்ச்சியில் முக்கியமானதொரு பங்காளன் ஆனார்.

இவர் பிரம்டன் தமிழ் மூத்தோர் சங்கத்தின் விசுவாசியாய் இருந்தார் என்பதால் நம்பிக்கையின் ஓர் அடையாளம் என்ற மதிப்பிற்குரியவராக்கப்பட்டுள்ளார். இந்நோக்குநிலையில் இவர் ஒரு விசுவாசக் கணவனாகக் தன் மனைவிக்கும் வினைத்திறன் கொண்ட தந்தையாக தன் பிள்ளைகட்கும் இருந்திருப்பார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இவ்வாறு தடம் பதித்து எம்மை விட்டுப் பிரிந்து செல்லும் தங்க மகனுக்கு மரியாதைக் காணிக்கையாக இவ்வுரையை இவரது பாசத் துணைவியார்க்கும் உண்மைப் பிள்ளைக்கட்கும் சங்க அங்கத்தவர்களுக்கும் பணிவாகப் பகிர்ந்து கொள்வதுடன் இவரது ஆத்மா ஈடேற்றம் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடை பெறுகின்றேன்.

கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை B.A. cey
அங்கத்தவர் பிரம்ரன் தமிழ் மூத்தோர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

வணக்கம்,

இந்த இரங்கலுரையை மிக்க மனவேதனையுடன் எழுதுகிறேன். காரணம் எங்கள் அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய நண்பர் திரு.தங்கவேல் ஐயா அவர்களுக்கான இரங்கலுரை எழுதும் ஒரு துரதிஷ்டமன சந்தர்ப்பம் இத்தனை சீக்கிரம் வருமென நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. தினமும் காலையில் அவரிடமிருந்து காலை வணக்கம் என வரும் நற்செய்தி messenger ல் வராமல் நின்று விட்டதே ஒரு ஏக்கத்தை தருகிறது. அவரை தங்கா என்று தான் நாங்கள் அன்பாக அழைப்போம். பெயருக்கேற்ப தங்கமான குணம் கொண்ட ஒரு மனிதர். எவர் மனதும் புண்படாமல் மென்மையாக பேசும் பண்பு, மற்றவர் நலன் மேல் அவர் காட்டிய அக்கறை, பொறுமையுடன் நிலைமைகளை சமாளிக்கும் திறமை என அவரைப் பற்றி கூறிக்கொண்டே போகலாம்.

அவரைப் போன்ற பொறுமை, அன்பு, கண்ணியம் நிறைந்த ஒரு உத்தம நண்பரின் பிரிவு நம் அனைவருக்கும், அவர் உபதலைவராக இருந்த பிரம்டன் தமிழ் மூத்தோர் சங்கத்துக்கும் ஓர் நிரப்பப்பட முடியாத பேரிழப்பு, சங்கத்தின் நலனுக்கும், ஒற்றுமைக்கும், வளர்ச்சிக்கும் மிகுந்த அக்கறை காட்டி உழைத்தவர். தனிப்பட்ட முறையிலும் கூட அவர் என் உடன்பிறவா சகோதரர் போல் நான் மனம் சோர்வடையும் தருணங்களில் எல்லாம் பக்க பலமாக நின்று அறிவுரை கூறுவார் அவர் உடல் நலமின்றி வைத்தியசாலையில் இருந்த சமயம் கூட நண்பர்களை தொலைபேசி மூலம் அழைத்து அக்கறையுடன் நலம் விசாரிக்கத் தவறவில்லை. இவரின் பிரிவு என் குடும்பத்தில் ஒருவரை இழந்தது போன்ற ஒரு உணர்வை தருகிறது. அவரின் இழப்பு நிரப்பப்படமுடியாத ஒன்று.


அவரை பிரிந்து துயருறும் அவர் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அவர் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து விடை பெறுகிறேன்.

**சிவா அரிகரன்**
**செயலாளர்**
**பிரம்டன் தமிழ் மூத்தோர் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




* அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்



*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்நன்றி கொண்ட மகற்கு"*

## அமரர்
## கதிரிப்பிள்ளை தங்கவேல்

எமது அன்புத் தெய்வம் காலமான செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறி உதவியவர்களுக்கும், இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், முக நூல் மூலமும் அனுதாபச்செய்தி தெரிவித்தவர்களுக்கும், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும், பதாகைகள் மூலம், அஞ்சலிக் கவிகள் செய்திகள் வெளியிட்டும், நினைவஞ்சலி நிகழ்வு நடாத்திய கனடா நாட்டில் வசிக்கும் நண்பர்கள், உறவுகள் அஞ்சலி செலுத்தி ஆறுதல் செய்தோர் இன்னும் மலரில் தமது இரங்கல் ஆக்கங்களை வெளியிட்டு உதவியவர்கள், பல வழிகளிலும் தினம் தினம் எம் இல்லம் தேடி தின்பண்டங்களை வழங்கிய எம் அன்பு உறவுகள் யாவருக்கும் அந்தியேட்டி, வீட்டுக் கிருத்தியங்களில் கலந்து சிறப்பித்தோர் மற்றும் சகல வழிகளில் உதவிகள் புரிந்தோர், இந்நூல் அச்சேற்றித்தந்த சிவரஞ்சனம் அச்சுப்பதிப்பகத்தினருக்கும் எங்கள் குடும்பம் சார்பாய் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதில் நிறைவடைகின்றோம்.

*ஓம் சாந்தி ஓம் சாந்தி*

இங்ஙனம்
குடும்பத்தினர்

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org